பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.00

சுடர்: 6 பிரமோதூத ஆடு தை 01 உ திங்கட்கிழமை (14-01-1991) UTHAYAN - A LIVELY TAMIL NATIONAL DAILY கதிர்: 49

# யுத்த நிறுத்த முறிவின் பின்னால் இராணுவமும் மகாசங்கத்தினரும்!

## அரசாங்கத்தைத் தம்வழிப்படுத்த தந்திரிமலையில் இருதரப்பு சந்திப்பு

கொழும்பு, ஜனவரி 14

விடுதலைப் புலிகள் அறிவித்த ஒருதலைப்பட்ச யுத்த நிறுத்தத்தை அரசு ஏற்காமல் நிராகரித்ததன் பின்னணியில் இராணுவமும் மகாசங்கமும் கூட்டாக இயங்கின என்று கொழும்பில் இப்போது செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

அரசாங்கத்தை தம்வழிப்படுத்துவதற்காக இரு தரப்பினரும் தந்திரிமலையில் கூடி ஆராய்ந்து, திட்டங்களைத் தீட்டியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

புலிகளின் ஒருதலைப்பட்ச யுத்த நிறுத்த அறிவிப்பு வெளியான கையோடு - டிசம்பர் 30 ஆம் திகதி - பாதுகாப்பு துணை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னா படைத் தளபதிகள் மற்றும் பிராந்திய தளபதிகளை அழைத்து அது குறித்து ஆலோசனை நடத்தினார்.

யுத்த நிறுத்தத்தை தாங்கள் அறவே விரும்பவில்லை என்று தெரிவித்த படை அதிகாரிகள், அந்த அறிவிப்புக்கு இணங்க வேண்டாம் என்றும் அமைச்சரை வற்புறுத்தினர்.

படையினரின் இந்தக் கருத்தை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னா ஜனவரி முதலாம் திகதி முப்படைத் தளபதிகளையும் தம்முடன் அழைத்துக் கொண்டு சென்று, ஜனாதிபதி பிரேமதாஸாவிடம் தெரிவித்தார்.

ஆனாலும் அதன்பின்னரும் - ஜனவரி 3 ஆம் திகதி - தாக்குதலை ஒரு வாரத்துக்கு இடைநிறுத்தி வைப்பதாக அரசு அறிவிப்பு ஒன்றை விடுத்தது.

எங்கே தங்கள் விருப்புக்கு

[2 ஆம் பக்கம் பார்க்க]

## தமிழகத்தில் ஈழ நபர் தீ மூட்டி தற்கொலை!

தமிழ்நாடு, புழல் என்னும் இடத்தில் திறந்த வெளி முகாமில் வைக்கப்பட்டிருந்த ஈ. பி. ஆர். எல். எப். உறுப்பினர் ராமஜயம் (வயது 28) என்பவர் கடந்த 4 ஆம் திகதி தனக்குத் தானே தீ வைத்துக் கொண்டார்.

அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அவர் எரிகாயங்கள் காரணமாக பின்னர் மரணமானார். (உ-எ)

## செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் குண்டு வீச்சிலிருந்து தப்பினர்!

### சிதறிக் கிடந்த சடலங்களையும் பார்த்தனர்

கிளிநொச்சி, ஜன. 14

நேற்று முன்தினம் மாலை கிளிநொச்சி பஸ்நிலையப் பகுதியில் இடம்பெற்ற கண்மூடித்தனமான குண்டு வீச்சு நடந்தவேளையில் செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் குழு அதிகாரிகளும் அங்கு அகப்பட்டுக்கொண்டனர்.

இவர்கள் பாதுகாப்பான இடங்களுக்கு விரைந்ததால் காயம் ஏதுமின்றித் தப்பிக் கொண்டனர்.

குண்டுவீச்சில் சின்னாபின்னமாகிச் சிதறிக் கிடந்த சடலங்களைச் செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் பின்னர் பார்வையிட்டனர்.

அத்துடன் சடலங்களையும், காயமுற்றவர்களையும், தரைமட்டமாகிக் கிடந்த கடைகளையும் அதிகாரிகள் புகைப்படம் எடுத்துக்கொண்டனர். [ஒ-76]

## சுக்லா வருவார்

கொழும்பு, ஜன. 14

இந்திய வெளியுறவு அமைச்சர் வி. சி சுக்லா தனது எம். பி. பதவியை இழந்தாலும் அவர் தொடர்ந்து அமைச்சராக இருப்பார் என்றும்-

திட்டமிட்டபடி எதிர்வரும் 29 ஆம் திகதி அவர் கொழும்புக்கு விஜயம் செய்வார் என்றும் தெரிவிக்கப்பட்டது

[உ-எ]

## ஸ்ரீலங்கா ராணுவத்தில் மேலும் ஒரு 'டிவிஷன்'!

கொழும்பு, ஜன. 14

ஸ்ரீலங்கா அரசின் இராணுவப் படைப் பிரிவில் மேலும் புதிதாக ஒரு "டிவிஷன்" ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இரண்டாவதாக புதிய டிவிஷனின் [illegible] என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

ஸ்ரீலங்கா இராணுவ கட்டமைப்பு 1988 ஆம் ஆண்டு மறுசீரமைக்கப்பட்ட போது ஒவ்வொன்றும் மூன்று முதல் ஆறு பிரிகேட்டுகளைக் [பிரிவுகளைக்] கொண்ட இரு டிவிஷன்கள் அமைக்கப்பட்டன. [illegible] மூன்றாவது

[2 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வாசக நேயர்கள், எழுத்தாளர்கள், விளம்பரதாரர்கள், விநியோகஸ்தர்கள், அபிமானிகள், ஆதரவாளர்கள் அனைவருக்கும்

உதயனின் பொங்கல் வாழ்த்துகள் உரித்தாகுக.

எல்லோரின் அல்லலும், அவலமும், வேதனையும் நீங்கி மங்களம்மலிய தைத்திருநாள் வழி காட்டட்டும்.

## ஆனையிறவுப் பகுதியில் தினசரி குண்டு வீச்சு!

கிளிநொச்சி, ஜன. 14

ஆனையிறவு இராணுவ முகாம் பகுதியைச் சூழவுள்ள இடங்களில் கடந்த நான்கு தினங்களாக - போர் விமானங்கள் மாறி மாறி குண்டுகளை வீசி வருகின்றன.

முகாமில் இருந்து அடிக்கடி இந்தப் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதலும் நடத்தப்பட்டு வருகிறது.

இயக்கச்சி, குறிஞ்சாத்தீவு உமையாள்புரம் பகுதிகளை இலக்கு வைத்தே இந்தத் தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன. (ஒ-76)

## குப்பிளானில் மோதல்

நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில் குப்பிளான் பகுதியில் இராணுவத்தினர் நடத்திய ஆர். பி ஜி தாக்குதலை அடுத்து விடுதலைப் புலிகளும் அருள்-89 தாக்குதலை மேற்கொண்டனர்.

படையினர் நடத்திய ஆர். பி. ஜி. தாக்குதலில் பெண் போராளியான மதனி (கமலநாயகிசெல்வராஜா-வந்தாறுமூலை, மட்டக்களப்பு) வீரமரணமடைந்தார் என்பது தெரிந்ததே.

படையினரின் தாக்குதலுக்கு பதிலாகவே அருள்-89 தாக்குதல் நடத்தப்பட்டது.

இதனால் படையினருக்கு ஏற்பட்ட சேதங்கள் குறித்து தெரியவரவில்லை. [ஒ]

### விடுமுறை

தைப்பொங்கல் திருநாளை முன்னிட்டு, உதயன் பணிமனை அலுவலர்களுக்கு இன்று விடுமுறையாகும். அதன்காரணமாக நாளை செவ்வாய்க் கிழமை மட்டும் [15-1-1991] உதயன் உங்களுக்குக் கிடைக்க மாட்டான்.

## வடமராட்சி ஊர்வலம்

யாழ்ப்பாணம், ஜன. 14

இலங்கை அரசு தமிழ் மக்கள் மீது மேற்கொண்டுள்ள இனப்படுகொலை மற்றும் பொருளாதாரத் தடையைக் கண்டித்து வடமராட்சி மக்கள் நேற்று ஊர்வலம் ஒன்றை நடத்தினர்.

நெல்லியடி மூத்த விநாயகர் கோவிலடியிலிருந்து ஆரம்பித்த மேற்படி ஊர்வலம் மந்திகையில் உள்ள செஞ்சிலுவைச் சங்க காரியாலயத்தை சென்றடைந்து அங்கு மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது. (ஒ-5-15)

## ரபிரோயும் வருகிறார்

இந்திய லோகசபை சபாநாயகர் ரபிரோய், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான கருத்தரங்கு ஒன்றில் கலந்து கொள்வதற்காக எதிர்வரும் புதன்கிழமை கொழும்புக்கு விஜயம் செய்கிறார்.

அவருடன் இந்திய எம்.பிக்கள் குழு ஒன்றும் விஜயம் செய்கிறது. (ஒ-எ)

## இருவர் கைது

மட்டக்களப்பு, கோயில் போரதீவைச் சேர்ந்த நல்லதம்பி சந்திரகுமார் [29 வயது], முருகன் சங்கரன் [27 வயது] ஆகிய இருவரும் கடந்த வெள்ளிக்கிழமை இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டனர்.

பெரிய நீலாவணை முகாம் இராணுவத்தினரே வழியில் இவர்களை கைது செய்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ)

## வெளியுறவு செயலராக டிக்ஸிற் நியமனம்?

இந்திய வெளியுறவு அமைச்சின் புதிய செயலாளராக ஜே. என். டிக்ஸிற் நியமிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இப்பதவிக்கு ஜே. என். டிக்ஸிற், ஐ. நாவுக்கான இந்தியத்தூதராகத் தற்போது கடமையாற்றும் சார் கான் ஆகியோரின் பெயர்கள் அடிபடுகின்றன.

ஆனால் ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு கவுன்ஸிலில் தற்போது புதிதாக இந்தியா அங்கத்துவம் பெற்றிருப்பதால் சார் கான் ஐ. நா, தூதர் பதவியிலிருந்து விலக்கப்படமாட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. [உ]

### முச்சந்தி முரளி



தை பிறந்தால் வழி பிறக்கும் என்று சொல்லுகினம்... நடக்கிறதைப் பாப்பம்......!

## ஷெல் தாக்கு

யாழ்ப்பாணம், ஜன. 14

ஆனையிறவு இராணுவத்தினர் நேற்று உப்பளம பக்கமாக துப்பாக்கிப் பிரயோகம் செய்தவாறு முன்னேறி வந்து

[2 ஆம் பக்கம் பார்க்க]

